1974 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

மாமல்லபுரம், சித்தன்னவாசல் கோயில்கள்

* 574 விஞ—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், சித்தன்னவாசல் பகுதிகளிலுள்ள கற்கோயில்களை பராமரிக்கும் பொறுப்பை மேற்கொள்ளும் வகையில் மத்திய சர்க்காரிடம் கோரிக்கை ஏதேனும் மாநில சர்க்கார் விடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: மாமல்லபுரத்தில் ஆதிவராகன் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோவிலை மத்திய அரசும் கைப்பற்ற வில்லை. மாநில அரசும் கைப்பற்றவில்லை. எந்த அரசாலும் பரா மரிக்க்கப்படாமல் அந்தக் கோயில் சீரழிந்த நிலையில் இருக்கிறது. அந்தக் கோவிலில் மகேந்திரவர்மனின் முழு உருவம் செதுக்கப்பட் டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய ஒரு மன்னனுடைய முழு உருவம் செதுக்கப்பட்டிருப்பதால், அந்தக் கோவிலை பொதுமக்கள் பார்வைக் காக வசதி செய்யும்பொருட்டு, மாநில அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை எடுத்து பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாமல்லபுரம், சித்தன்னவாசல் இன்னும் இவைபோன்ற 118 வரலாற் றுச் சிறப்பு மிக்க இடங்கள் மத்திய அரசின் பராமரிப்பில் இருக் கின்றன. நாட்டிலுள்ள எல்லா கோவில்களையும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. வரலாற்று சிறப்பு கொண்ட சில பல கோவில்கள் மாநில அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாலும், மத்திய அரசு தொல் பொருள் ஆராய்ச்சித் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் மற்ற பல கோவில்களையும் பழமையான சின்னங்களையும் இந்தத் துறையினர் படி எடுத்திருக்கிறார் கள். எல்லாவற்றையும் பராமரிக்க வேண்டுமென்ற நிலை இல்லை: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோவிலும், அவ்வாறு ஆராய்ந்து பார்த்துவிட்டு, அவசியம் இல்லை என்ற காரணத்தினுல் விடுபட்டிருக்கலாம். தனிக் குறிப்பு அனுப்பினுல் விபரம் தரப்படும்.